# கருத்தமைதி நாள் 2022-2023

**தலைப்பு :**ஒருங்கிணைதலின் இலக்கணங்கள் நமது அன்றாட வாழ்வின் அடிப்படைத் தத்துவம்

முன்னுரை :

**பிரபஞ்சம் சிலந்தி வலை போன்றது.**
**சிலந்தி வலையில் ஏதேனும் ஓர் இடத்தை**
**நாம் தொட்டால் வலை முழுவதும் அதிர்கிறது.**
**அதைப் போலவே ஓர் இலையை நாம் தொட்டால்**
**வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் நடுங்கும்.**

**இலையைத் தொடும்போது நட்சந்திரங்கள் நடுங்குவது நம் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் படைப்புகள் அனைத்தும் அந்தரங்கத்தில் உறவு கொண்டிருக்கின்றன.**

பிரபஞ்சம் என்றாலே ஒருங்கிணைதல் என்றுதான் பொருள். இந்தப் பிரபஞ்சத்தில் எவையும் தனித்து இல்லை. ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று மற்றொன்றை சார்ந்து உள்ளது. ஒன்று மற்றொன்றின் இயக்கத்திற்கு காரணமாக உள்ளது. எவை ஒன்று தன் இயக்க நிலையை இழந்தாலும் இப்பிரபஞ்சம் முழுவதுமே பாதிக்கப்படுகிறது. இப்பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட அனைத்தும் அதனதன் பணியைத் தொய்வின்றி அச்சுப்பிசகாமல் அப்படியே செய்து கொண்டு இருக்கிறது. சூரியன் தன் பாதையிலிருந்து சற்று விலகினால் இந்த உலகத்தின் கதி என்ன? பூமி நான் சூரியனை சுற்ற மாட்டேன் என்று முரண்டுபிடித்தால் நம் நிலை என்ன ஆகும் சிந்திப்போம். கோள்களுக்குள் நான் தான் பெரியவன் என்ற போட்டி ஏற்பட்டால் இந்த உலகத்தின் நிலை என்ன? இப்பிரபஞ்சத்தை நினைக்க நினைக்க வியப்பூட்டுகிறது, சிந்திக்க சிந்திக்க விந்தையாய் இருக்கிறது. படிக்க படிக்க பேரானந்தமாக இருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் ஒன்று இல்லாமல் மற்றொன்று இல்லை.

நமக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள தொடர்பை சற்று சிந்திப்போம். சூரியனுக்கும் நமக்கும் எத்தனை இலட்சம் மில்லியன் இடைவெளி உள்ளது. சூரியன் அதிகம் பட்டால் நம் உடம்பில் உள்ள தோல் புண்ணாகிவிடுகிறது. சூரியன் படவில்லை என்றால் தோளில் பிரச்சனை ஏற்பட்டுவிடுகிறது. சத்துக்குறைவு ஏற்படுகிறது. கோள்களுக்கும் நமக்கும் எத்தனை மில்லியன் இடைவெளி உள்ளது? அவை இயங்கவில்லை என்றால் நமக்கு இரவு பகல் ஏது? **பேரறிவு - இறைவன் பேரன்பு - இயேசு பேராற்றல் - தூய ஆவி** இணைந்திருப்பதுபோல இந்தப் பிரபஞ்சமும் ஒருங்கிணைந்து உள்ளது.

பாடல் : ஒளியாம் இறையே வாராய்

**ஐம்பூதங்களின் ஒருங்கிணைதல்.**

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் - தொல்காப்பியம்**

**இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே.**

உயிராக்கமே நிலம், நிலத்தின் தன்மையை ஒட்டித்தான் நீரின் சுவை அமைகிறது. நிலமும் நீரும் இருந்தாலும் உயிரினங்களின் இயக்க ஆற்றலே காற்றுதான். நிலம், நீர், காற்று இருந்தாலும் இந்த அண்டப்பெருவெளியில் நெருப்பும் பரந்து விரிந்திருக்கிறது. இவை அனைத்தும் இருந்தாலும் வியப்பின் சிகரமாக இருப்பது விண். விண்வெளியின் அங்கங்கள் தான் நிலம், நீர், நெருப்பு, காற்று முதலியன. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, பூமி இன்னும் பல எண்ணற்ற கோள்களைத் தெருக்களாகக் கொண்ட ஓர் ஊர் தான் விண்உலகம். இந்தப் பஞ்சபூதங்கள் ஒருங்கிணைந்து செயல்படவில்லை என்றால்

இங்கு அனைத்துமே பதறாகிவிடும். இறைவனின் படைப்பு ஒவ்வொன்றும் ஒரு புத்தகமாக இருக்கிறது. அதைப் படிக்கத் தெரிந்தால் வாழ்க்கையின் ரகசியங்களைப் புரிந்து கொள்ளலாம். வானம், காற்று, நெருப்பு, நீர், மண் எல்லாமே ஞானத்தைப் போதிக்கும் நூல்கள். இந்த நூலைப்படிக்கத் தெரிந்தவர்களே ஞானிகள் ஆகிறார்கள். படைப்பின் சிகரத்தை பாடாமல் இருக்கமுடியுமா? வாருங்கள் அனைத்தையும் படைத்த ஆண்டவனைப் புகழ்ந்துப் பாடுவோம்.

**பாடல்: ஆடும் திரைக்கடலே**

## உடலின் ஒருங்கிணைதல்:

**1கொரிந்தியர் 12: 12-22**

இந்த உடல் ஒரு பிரபஞ்சம். இந்த உடல் என்னும் பிரபஞ்சத்தின் உடன்பிறப்புகளான அங்கங்கள் அனைத்தும் ஒருங்கிணைதலுக்கு சிறந்த முன்மாதிரி

**மனிதர்கள் ஒவ்வொருவரும் மற்றவரின் அங்கம்**
**அனைவரும் ஒரே மூலத்திலிருந்து உருவாக்கப்பட்டவர்கள்.**
**ஒருவன் காயப்பட்டால் மற்றவன் வருந்த வேண்டும்.**
**மற்றவன் துன்பம் கண்டு வருந்தாதவன் மனிதன் என்று அழைக்கப்படத் தகுதி இல்லாதவன்.**

மனிதன் தனித்து வாழ முடியாது. அவன் தேவைகளை அவன் ஒருவனாகவே நிறைவேற்றிக்கொள்ள முடியாது. அதற்காகவே அவன் சமூகம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கிக் கொண்டான். சமூக வாழ்க்கையே " நான் உனக்கு உதவுகிறேன்: நீ எனக்கு உதவவேண்டும் என்ற ஒப்பந்தத்தின் ஒருங்கிணைதலின் அடிப்படையில் அமைந்தது தான்.

ஒருங்கிணைதலின் முக்கியமான எடுத்துக்காட்டு நம் உடல் தான். உடலின் அங்கங்களைப் பாருங்கள். எவ்வளவு அழகான ஒருங்கிணைதல் நடைபெறுகிறது. வாய் உண்ணக் கை உதவுகிறது. கண்கள் உறங்கக் காது தாலாட்டுக்கேட்கிறது. உடல் முழுவதும் உயிரோடு இயங்க மூக்கு சுவாசிக்கிறது. கால் நடக்க கண் வழிகாட்டுகிறது. இடையிலிருந்த உடை நழுவினால் கை ஓடிச்சென்று தாங்குகிறது. உடலில் எங்கே காயப்பட்டாலும் கண் அழுகிறது. எல்லா அங்கங்களுக்கும் இதயம் தாய்ப்பால் ஊட்டுகிறது. நம்முடைய கண், காது, மூக்கு வாய், கை, கால் எல்லாமே தோற்றத்தில் வெவ்வேறாக இருந்தாலும் ஒரு உடலின் அங்கங்கள் என்ற வகையில் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இதைவிட மிகச் சிறந்த எடுத்துக்காட்டு நமக்கு வேறென்ன இருக்க முடியும். நம் உடலுக்கு இந்த ஒருங்கிணைதல் இல்லை என்றால என்ன ஆகும் ? கண்களுக்குள் கலவரம் ஏற்பட்டால் காட்சி ஏது? பல்லுக்கும் நாவுக்கும் பகைமை என்றால் பேச்சு ஏது? ஒவ்வொரு காலும் ஒவ்வொரு திசையை நோக்கி நடந்தால் பயணம் ஏது? அறிவற்ற அங்கங்களுக்குத் தெரிந்திருக்கின்ற இந்த ஒருங்கிணைதல் அறிவுடைய மனிதருக்குத் தெரியாமல் போகிறது. மனிதன் ஒவ்வொருவனும் தன்னுடனும், அடுத்திருப்பவனுடனும், இந்தச் சமூகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளான்.

பிரபஞ்சம் வேறு, நாம் வேறல்ல. கடலின் நீர்த்துளி போல இந்தப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி நாம். "நான்" என்ற அகங்காரம் பிரபஞ்சத்திலிருந்து நம்மைப் பிரிக்கிறது. அதாவது பிரபஞ்சம் வேறு நாம் வேறு என்ற மாயைதான் உணர்வை உண்டாக்குகிறது. இந்த நான் என்ற உணர்வு நீங்கிவிட்டால் பிரபஞ்சத்தோடு நாம் ஒன்றாகக் கலந்துவிடுவோம். அப்படி கலந்து விட்டால் நண்பன், பகைவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், பெண், ஆண், ஊர், உறவு, மரம், மலை, சூரியன், சந்திரன், இரவு, பகல் என்ற பேதம் எல்லாம் போய்விடும். எல்லாம் ஒருமையில் கலந்து ஒன்றாகிவிடும்.

உள்ளத்தில் நிறைவு உடையவன்
எல்லா இடங்களிலும்
எல்லா நேரங்களிலும்
நல்லதையே காண்பான்.

**பாடல் : என் தெய்வம் வாழும் பூமியிது**

**நாமும் பிரபஞ்சமும்:**

**<u>வாசிக்க – வசிக்க</u>** 22வது பொதுப்பேரவை கொள்கை பக் : 41 ( 9.4, 9.5)

**ஒருவன் உனக்குத் தீமை செய்தால்**
**அதற்கு மாறாக நீ**
**அவனுக்கு நன்மையைச் செய்**

இந்தப் பிரபஞ்சத்தில் ஏதேனும் ஓரிடத்தில் ஏதேனும் நிகழ்ந்தால் அது முழுப் பிரபஞ்சத்தையும் பாதிக்கிறது. இந்தப் பிரபஞ்சம் ஓர் உடல். கை வாய்க்கு ஊட்டும் உணவு சத்தாகி அதற்கே வந்து சேர்கிறது. அதுபோலவே நாம் பிறர்க்கு செய்யும் தீமை நமக்கே திரும்பி வரும் . கை வாய்க்கு நஞ்சூட்டினால் கையும் சேர்ந்துதான் இறந்து போகிறது. பிறரைப் பகைப்பவன் உண்மையில் தன்னையே பகைக்கிறான். பிறருக்கு தீமை இழைக்கிறவன் தனக்கே தீமை இழைக்கிறான். இந்தப் பிரபஞ்சத்தில் அனைவரும ஒன்றே. யாரும் எதுவும் தனித்து இல்லை என்ற ஞானம் பெற்றவர்கள் யாரையும் பகைக்கமாட்டார்கள். இந்த ஞானம் அடைந்தவர்களுக்கு துன்பமில்லை. அவர்கள் வாழ்க்கையே சொர்க்கமாகிவிடும்.

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மண். குறள் 996**

பண்புடையவர்களால் தான் இந்த உலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இல்லை என்றால் இது அழிந்து போகும். நல்ல பண்புகளை விதைத்து புனிதமான பிரபஞ்சத்தைக் காப்போம். ஒருங்கிணைதலின் உன்னதத்தை உணர்ந்து, மகத்துவத்தை உணர்ந்து வாழ்வோம்.

**பாடல் : எத்துனை நன்று எத்துனை நன்று**

**வாருங்கள் வாழ்வோம்**

- இந்தப் பிரபஞ்சத்தில் நிறைந்திருக்கும் அதியத்தை, ஆற்றலை நம் வாழ்க்கையில் அன்றாடம் உணர்வோம்.
- பிரபஞ்சத்தைப் போன்று எல்லா நேரமும் சுயநலமில்லாமல் அனைவருடனும் இணைந்து வாழ்வோம்.
- இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் மிக முக்கியமானவை என்பதை அறிந்துகொண்ட நாம் உடன் வாழும் சகோதரிகள் அனைவரும் மிக முக்கியமானவர்கள் என்று உணர்வோம்.
- பிரபஞ்சத்தைப்போன்று எதையும் எதிர்ப்பார்க்காமல் கொடுத்துக்கொண்டே இருப்போம்.
- சூரியன் தனக்காக உதிப்பதில்லை, காற்று தனக்காக வீசுவதில்லை, மரம் தனக்காக காய்ப்பதில்லை. எந்தக்காயும் தனக்காக கனிவதில்லை. ஓர் அறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிர்கள் எதுவும் தனக்காக வாழ்வதில்லை. கொடுப்பதில் தான் இன்பம் இருக்கிறது என்பதைக் கற்றுத்தருகிறது. ஆறறிவு உள்ள நாம் ? சிந்திப்போம்.
- நமது எதிர்மறை எண்ணங்கள், சிந்தனை , சொல் , செயல் அனைத்தையும் இந்தப் பிரபஞ்சத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து நல்லதை மட்டும் பேசுவோம். அனைத்தையும் நல்லதாகக் காண்போம்.
- ஆடை நழுவினால் கை தானாகச் சென்று சரி செய்வது போன்று நாமும் நம்முடன் வாழும் சகோதரிகளின் துன்பத்தில் நாமாகச் சென்று உதவுவோம்.
- இவ்வுலகில் உள்ள ஒவ்வொன்றுடனும் நாம் தொடர்பு கொண்டுள்ளோம் என்பதை உணர்ந்து அனைத்திலும் அனைவரிலும இறைமையைக் காண்போம்.

- இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஒன்றிணைந்து இயங்குகிறது. நாமும் இயக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறோம் என்ற விழிப்பு நிலையில் வாழ்வோம்.
- அன்றாடம் நாம் பயன்படுத்தும் அனைத்துப்பொருட்களிலும் பல கோடி மக்களின் ஒருங்கிணைதல் இருக்கிறது என்பதை உணர்ந்து நன்றி சொல்வோம்.
- நான், எனது, என்னுடைய, எனக்கு போன்றவற்றிலிருந்து கடந்து செல்வோம். ஒருங்கிணைதல் நம்மில் நடைபெறுவதை அகத்தில் உணர்வோம்.

இறுதி செபம் :

**22வது பொதுப்பேரவை கொள்கை பக் : 38 (9:1)**